விலை ரூபா 1-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 29 தை 23 ஐ. ஆகிர் பிறை 17 இதழ் 252

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 6-2-1988

87 டிசம்பரில் ஒத்திவைக்கப்பட்ட

## ஜி. ஸி. ஈ. பரீட்சை நடக்குமா?

## 10 நாளில் தெரியும்

[யாழ்ப்பாணம்]

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெறவிருந்து, பின்னர் ஒத்திவைக்கப்பட்ட ஜி. ஸி. ஈ. சாதாரண தரப் பரீட்சை, இவ்வருடம் மார்ச் அல்லது ஏப்ரலில் நடைபெறுமா?

இப்பரீட்சையை நடத்துவதா இல்லையாஎன்பது குறித்து இம்மாத நடுப்பகுதிக்குள் தீர்மானிக்கப்படும் என்று யாழ். கல்விப்பணிப்பாளர் ஜனாப், எம். எம். மன்சூர் 'ஈழநாடு'வுக்கு நேற்று தெரிவித்துள்ளார்

இப்பரீட்சையை நடத்துவது குறித்து கல்விஅமைச்சே தீர்

(6ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு - யாழ் ரயில் அடுத்த வாரம் ஓடும்?

(நமது நிருபர்)

வடபகுதிக்கான புகையிரதச் சேவை அடுத்தவாரம் முதல் யாழ்ப்பாணம்வரை நீடிக்கப்படலாம் எனத்தெரியவருகிறது.

வடபகுதிக்கான புகையிரத

(6-ம் பக்கம் பார்க்க)

# டிக்ஸிற் யாழ் வந்து நிலைமைகளை நேரில் அவதானித்துச் சென்றார்

## பிரஜைகள் குழுவினருடனும் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

**இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் நேற்றுயாழ்ப்பயணத்துச்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு வடபகுதி நிலைமைகளை நேரில் அவதானித்துச் சென்றார்.**

நேற்றுக்காலை 10-30 மணியளவில் அவர் கொழும்பிலிருந்து விசேஷ விமானம் மூலம் வந்துசேர்ந்தார்.

இந்திய-அமைதிப்படை யாழ் பொறுப்பதிகாரி பிரிகேடியர் காலோனை சந்தித்து இன்றைய நிலைமைகுறித்து அவர் நீண்ட நேரம் கலந்துரையாடினார்.

அதன்பிறகு யாழ் பிரஜைகள் குழு அங்கத்தவர்களையும் திரு. டிக்ஷிற் சந்தித்து கலந்துரையாடினார்.

அதன் பிறகு யாழ் செயலகத்துக்கும் அவர்விஜயம் செய்தார்.

அத்துடன்பலாலி இராணுவ முகாமுக்குச் சென்று அங்குள்ள உயர் அதிகாரிகளுடனும் பேசினார்.

திரு. டிக்ஷிற் அதன் பிறகு நல்லூர் கந்தசாமி கோயிலுக்கும் யாழ். நகரிலுள்ள சில பாடசாலைகளுக்கும் விஜயம் செய்து கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்களுடன் உரையாடினார்.

அண்மையில் இந்தியா சென்று திரும்பிய திரு. டிக்ஸிற் நேற்று மேற்கொண்ட யாழ் விஜயம் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

நேற்றுப்பிற்பகல் 2-30 மணியளவில் அவர் தமது யாழ். விஜயத்தைமுடித்துக்கொண்டு கொழும்பு திரும்பினார்.

தென்பகுதியில் தொடரும் வன்முறை:

## அதிரடிப்படையினர் சுட்டதில் இருவர் பலி!

[கொழும்பு]

தென்பகுதியில் இடம்பெற்ற இரு வெவ்வேறுசம்பவங்களில் விஷேட அதிரடிப்படையினர் சுட்டதில் இருவர் கொல்லப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமை திக்வெல பகுதியில் கடையில் பொருள்கள் வாங்கிக் கொண்டு திரும்பிய இளைஞரொருவரை அதிரடிப் படையினர் சுட்டுக் கொன்றனர். பின்னர் அவரதுசடலம் உறவி

(6-ம் பக்கம் பார்க்க)

## இரத்தவெள்ளத்தில் ஆணின் சடலம்!

[யாழ்ப்பாணம்]

அடிகாயங்களுடன் இரத்த வெள்ளத்தில் 40 வயது மதிக்கத்தக்க ஒருகருமைநிற ஆணின் சடலம் நேற்றுக் காலை நாவலர் வீதி-கோவில் வீதி சந்திக்கு அருகில் காணப்பட்டது.

கோடிட்ட நீலநிற ரி சேர்ட்டும். நீல கோடு சாரமும் அணியப்பட்டிருந்த சடலம், வெள்ளைத் துணியினால் போர்த்தப்பட்டிருந்தது.

அருகில் ஒரு இடத்தில் பெருமளவு இரத்தம் உறைந்திருந்தது.

வீட்டுக் கதவுக்குப் போடும் கட்டை ஒன்று முறிந்தநிலையில் சடலத்திற்கு அருகில்கிடந்தது.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இந்தச்சடலம் அடையாளம் காணும் பொருட்டு யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

### நாவலர் வீதியில் கொள்ளை

இதேவேளை நாவலர் வீதியிலுள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் ஒன்று தொடர்பாக இந்திய அமைதிகாக்கும் படையிடம் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன.

வடக்கு கிழக்கு வழமைக்குத் திரும்ப

## இலங்கை – இந்திய கூட்டுத்திட்டம் இவ்வாரம் இறுதி முடிவு

(கொழும்பு)

**வடக்கு, கிழக்கு நிலைமைகளை துரிதகெதியில் வழமைக்குக் கொண்டு வரும்பொருட்டு இலங்கை இந்திய கூட்டுத்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது. இதற்கான நகல் திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருக்கிறது**

**இலங்கை - இந்திய அதிகாரிகள் இவ்வாரம் சந்தித்து இந்தத்திட்டத்தை அமுல்செய்வதற்கான இறுதிமுடிவை எடுப்பார்கள்.**

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளையடுத்து இந்த நகல் திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சிவில் நிர்வாகத்தை தடங்கலின்றி அமுல்செய்வதே இந்தத்திட்டத்தின் முதல் நோக்கமாக இருக்கும்

அசம்பாவிதங்களின்போது இடம்பெயர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை அவர்கள் சொந்த இடங்களில் குடியமர்த்துதல் இந்தத்திட்டத்தின் மற்றைய நோக்கமாக இருக்கும்.

இதற்கு ஏற்றவிதமாக யாழ்ப்பாணத்தில் உள்ளது போல் திருகோணமலை, அம்பாறை, வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய இடங்களில் இந்திய துருப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

மட்டக்களப்பில் இதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுவிட்டன.

ராஜீவுடன் நடத்திய பேச்சுக்கள்

## லலித் பூரண நம்பிக்கை

(கொழும்பு)

"அண்மையில் இந்திய பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் நாட்டின் இக்கட்டான நிலைமையை தணித்து வடக்கு கிழக்கு பகுதிகளில் ஜனநாயகத்தை மீண்டும் ஏற்படுத்தக் கூடிய விதத்தில் அமைந்திருந்தன ''

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி இவ்வாறு கூறினார்.

இரத்மலானையில் புதிய தபால் அலுவலகம் ஒன்றை திறந்து வைத்து பேசிய அவர் மேலும் கூறியதாவது,

"இந்தியப் பிரதமருடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் பலாபலன் விரைவில் தென்படும்.

"எமது மக்களின் உள்ளுணர்வுகளையும்' அபிலாஷைகளையும் நான் இந்தியப் பிரதமரிடம் எடுத்துச் கூறினேன்'

"அமைதிப்படையினர் இங்கு இருப்பது குறித்து எமது மக்களின் ஒரு பகுதியினர் தெரிவித்துள்ள அச்சம் குறித்தும் சந்தேகம் குறித்தும் இந்தியப் பிரதமரிடம் நான் எடுத்துக் கூறினேன்.

அதற்கு இந்தியப்பிரதமர் என்னிடம் கூறியதாவது:

"ஒரு அழைப்பின் பேரிலேயே நாம் இலங்கை வந்துள்ளதாக தயவு செய்து உங்கள்மக்களிடம் கூறுங்கள். இந்த அழைப்பு வாபஸ் பெறப்படும் பட்சத்தில் நாம் நாடு திரும்பிவிடுவோம், நாம் ஒரு நோக்கத்துக்காகவ அழைக்கப்பட்டிருக்கிறோம் '' என இந்தியப்பிரதமர் தெரிவித்தார்.'' என்று அமைச்சர் கூறினார்.

## யாழ் — கொழும்பு தொலைபேசி இணைப்பு வேலை முடியவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் – கொழும்பு நேரடித் தொலைபேசி இணைப்பு இன்னும் ஏற்படுத்தப்படவில்லை என்றும் தொடர்ந்து திருத்தவேலைகள் நடைபெற்றுவருவதாகவும் தொலைதொடர்பு நிலைய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ் நகருக்குள் சில தொலைபேசி தொடர்புகள், பரிவர்த்தனை நிலையத்தின் ஊடாக இயங்கிவருவதாகவும், யாழ். நகருக்கு வெளியில் தொடர்பு கொள்ள இதுவரை ஏற்பாடு செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

கேபிள்கள், மற்றும் சாதனங்கள் பெருமளவில் சேதமடைந்திருப்பதால், படிப்படியாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கொட்டடியிலுள்ள தொலைதொடர்பு நிலைய சாதனங்கள் மட்டுமன்றி கட்டடமே பெருமளவில் சேதமடைந்திருப்பதால் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு சாதனங்கள் பொருத்தப்பட்ட பின்னரே இயங்கமுடியும் எனறும் அவர் தெரிவித்தார்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய தேங்காய்எண்ணை மில்,கொப்பரு உடைக்கும் கட்டர் உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 44ப, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம் [சி 2065]

Sony T.V Colour 28'' Automatie உடனடி விற்பனைக் குண்டு, வ திருசெல்வராஜா, நந்தாவில் அம்மன் கோவிலடி, கோண்டாவில். சி-2012

மாணவர் அடையாள அட்டை விற்பனைக்குண்டு. பாடசாலைகட்கு மட்டும் மொத்தமாகவழங்கப்படும். செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம். சி-2000

நல்லஇன [பிறிமா] புறொயிலர் குஞ்சுகள் பேட்டுக் குஞ்சுகள் மற்றும் புறொயிலர்கோழிகள் எம்மிடம் பதிவு செய்து கொள்ளலாம். 10ம்திகதிபுதன் கிழமை விநியோகிக்கப்படும். தொடர்பு; S M காட்வெயர் 11/6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் முத்துக்குமாரு, 802, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். சி-2068

ரெலிவிசன் ரியூப், ரியூனர், F/Y Back வீடியோ டெக், மோட்டர், வீடியோ செட் மற்றைய உதிரிப்பாகங்கள் உடன்விற்பனைக்குண்டு. பெற முடியாத உதிரிப்பாகங்கள் ஓடர்களிற்கு பெற்றுக்கொடுக்கப்படும் விபரங்கட்கு Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, [றெயில்வே கடவையருகாமை] யாழ்ப்பாணம். சி-2047

Prima Quality Chicks— Lohmann வெள்ளை, சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் Hy Line கறுப்புபேட்டுக்குஞ்சுகள் வெள்ளிக்கிழமை சனிக் கிழமைகளில் விநியோகிக்கப்படும். உடன்பதிவு செய்யவும் Nallur Form Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர்லேன்,நல்லூர். சி-2063

Kandy Uplands Farm Ltd கோழிக்குஞ்சுகள்18-2-88வியாழக்கிழமை காலை விநியோகிக்கப்படும். லோமான் பிறவுண் [ஜேமன்] பேட்டுக் குஞ்சு ரூபா 12-50, லோமன் சேவல் ரூபா 4-00 முன்கூட்டியே உடனே பதிவுசெய்து கொள்ளுங்கள். தொகையாக எடுப்பவர்களுக்கு விஷேச சலுகை உண்டு. S. Godwin, No 09, Kandiah Lane, Chunnakam East, Chunnakam. [ஸ்டேசனுச்கு அருகாமையில்.] சி-2032

எல்லா இன கோழிக்குஞ்சுகளும் 1988 பெப்ரவரியிலிருந்து விநியோகிக்கப்படும். முன் கூட்டியே முற்பணம் செலுத்தி பதிவு செய்யவும். பதிவு செய்யும் இடங்கள்: R. S. K Farm, Muruga Pathy, Uduvil. 2. குபேரன் ஸ்டோர்ஸ், கே. கே. எஸ். றோட், கொக்குவில் சந்தி, கொக்குவில். 3. கவுரிபேரோஸ் ஸ்ரோஸ், ஆஸ்பத்திரிவீதியாழ்ப்பாணம். 4. Farm house, கோட் றோட், மல்லாகம். 5. Red Rose Farm, தெளியெம்பை, வல்வெட்டித்துறை. 5 கோகிலா கூல்பார், கொடிகாமம். சி-2009

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், அல்மாரி, கட்டில், Show Case, சிறிய பெரிய கபேட்கள், பித்தளை, சில்வர் பொருட்கள், கண்ணுடி மேசைகள், Rice Cooker, Toaster, கடை சோகேஸ், Baby Cot, ஹோல் செற்,குசினிப்பொருட்கள் மற்றும் பல மலிவுவிலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [சி 2074]

## தேவை

பொறியியல் நிறுவனம் ஒன்றுக்கு இரவு காவலாளிதேவை ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம். நேரில் தொடர்பு கொள்ளவும். 449, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி 2066]

யாழ் நகரில் வர்த்தகம் செய்யும் ஒருவருக்கு வீடு தேவை. வாடகையாயினும், ஒத்திகையாயினும், விற்பனைக்காயினும் ஏற்றுக்கொள்ளப்படும். வண்ணார்பண்ணை சுற்றுடல் விரும்பத்தக்கது. தொடர்பு: கோபாலகிருஷ்ணன், 87/1, மானிப்பாய்வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (சி2053)

மின்தறி நெசவாலைக்கு வாப் ஓடுபவர் [Warper] பொருத்துனர் தேவை. நேரில்வரவும். ஸ்ரீ ராஜ் ரெக்ஸ் இன்டஸ்றீஸ், வட்டுகிழக்கு, சித்தன்கேணி [சி 2061]

யாழ் நகரில் வர்த்தக ஸ்தாபனமொன்றிற்கு அனுபவமிக்க பெண் லிகிதரும், கடிகாரம் திருத்துனரும் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது தொடர்பு: விளம்பர இல 2052, C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். [சி2052]

பிரபல நிறுவனமொன்றிற்கு அனுபவமுள்ளபெண்காசாளர் உடன் தேவை. தொடர்பு: பாலாஜி ரேட் சென்றர், 61, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம், [வெலிங்டன் சந்திக் கருகாமையில்]. சி-2035

பார்மஸியில் அனுபவமுள்ள பெண்பிள்ளைகளும, பார்மஸியில் பயிற்சிபெற விரும்பும் பெண்பிள்ளைகளும் 07-02-1988 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் நேரில் வரவும் (முன்னர் விண்ணப்பித்தவர்களும் சமுகம் தரலாம்) யாழ் மெடி கிளினிக் அன் பார்மஸி, 96, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர். [சி2042]

அங்கில ரைப்பிங் வேலைகளில் ஐந்து வருட அனுபவமுள் ஆங்கிலமொழியில் நன்கு தேர்ச்சியுமுள்ள 'ரைப்பிஸ்ட்' உடன் தேவை சேவை ஓய்வு பெற்றவர்களது விண்ணப்பங்களும் கவனத்தில் கொள்ளப்படும். இருபாலாரும் இம் மாதம் 14ந் திகதி (14-02-88) ஞாயிறு நேரில் வரவும். கிளின்கட், இல: 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [ஏ 2496]

## வகுப்பு

G S.Q (Bio) and G.S Q [maths] [1988 August] புதிய வகுப்புக்கள் பங்குனி 1ம் திகதி ஆரம்பமாகவுள்ளன Pharmacy 1988, 1989 ஆரம்பமாகவுள்ளது மாசி 10ம திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும் அதிபர், உயர்கலைக் கல்லூரி, 73. பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். சி-2021

G C E [O/L] [விஞ்ஞானம்] [1988 Dce]. G C E [A/L] [கலை, விஞ்ஞானம், வர்த்தகம்] [1988 Aug, 1989 Aug] Stenograpy (Shorthand and Typing] [Landon and Ceylon Exam], விஞ்ஞான முறைப்படியான தையல் வகுப்பு, மனையியல் வகுப்பு [Diploma] பங்குனி 1ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. மாசி20ம் திகதிக்குமுன், சேரவிரும்புவோர் தொடர்புகொள்ளவும். அதிபர், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். சி-2020

## வகுப்புக்கள்

பௌதிகவியல் G. C. E (A/L) 88 ஆரம்பம்: 1. புலங்கள் [சனி, ஞாயிறு] 7-15a m -8-30 a m., 2மீட்டல் வகுப்பு [சனி, ஞாயிறு] 10-30 a. m ஆசிரியர், N பத்மநாதன் B Sc [Hons] நாகலிங்கம் இன்ஸ்ரிடியூட் திருநெல்வேலி. சி-2073

## கல்வி

பாலராசிரியர் பயிற்சிநெறி சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகிறது. க. பொ. த. (சா/த) சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம் நேரில் வந்து பயில முடியாதவர்கள் தபால் வழியும் பயிலலாம். பாலராசியர் சங்கம், 42, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி 2051]

## சேவை

எம்மிடம்வைத்தியர்,பொறியியலாளர்கள், விரிவுரையாளர்கள் முதற்கொண்டு சகல தரத்திலும் மணமக்கள் உள்ளனர். தொடர்புகொள்க: V.I N, மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம், ஆனைக் கோட்டை, சி-2039

Typewriters — தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் விற்கவும் Fudo Enterprises, 39/17, Power House Road, 3-rd Lane, Jaffna. C-2011

Transformers— டெக், ரீ-வீ றேடியோ, பூஸ்ரர் பற்றறி சாச்சர், வெல்டிங் — சகல ரான்ஸ்போமர்களும் உடனுக்குடன் றீவைண்டிங் செய்து கொடுக்கப்படும். ஆறுமாத உத்தரவாதம் உண்டு. Winding Done While you wait ஒமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். சி-2014

முதலாம் குறுக்குத்தெருவில் உள்ள யாழ். சைனீஸ் றெஸ்ரறோன்ற் தினசரி காலை 10 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை திறந்திருக்கும். First and the best Chinese Restaurant in the North. (சி 1857)

## பயிற்சி

ரெலிவிசன் வீடியோ டெக் றிப்பியறிங் Computer Programming (Basic) வயறிங், றீவைண்டிங், Diploma in Draughtsmanship சனி, ஞாயிறு பயிற்சிகள் ஆரம்பம், 06 02-88 விபரங்களுக்கு: Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம். [சி 1998]

## FOR SALE

Suntar Wideangle and telephoto lenses with exclusive viewfinder and case in excelent condition, can be titted to any camera. No. 180 Navalar Road, Brown Road Junction, Jaffna (சி 2056)

Latest Arrivals of English Book for Students. Charles Dickens Oliver Twist 33/25 A tale Two Cities 33/25 David Copperfield 42/00 Litte Woman [L M Alcott] 29/5 Available at Poopalasingham, Book Depot Jaffna A-2499

## வாடகைக்கு

சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்க: 3-ம் கட்டையடி, பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம். [சி 2048]

## வாடகைக்கு

சகல வசதிகளுடன் உள்ள வீடு சிறிய குடும்பத்திற்கு வாடகைக்குண்டு. தொடர்பு: ஞானம், 21, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். [சி 2050]

## தவறிவிட்டது

ஆர். பாஸ்கரலிங்கம் டச்சு றோட் அளவெட்டி என்பவருடைய இன்ஸ்சூரன்ஸ் ரைக்ஸ்கார் புத்தகமும்வேறு சிலதஸ்தாவேஸுக்களும்பிறவுண்பாக்குடன் சுன்னாகத்திற்கும்யாழ். கச்சேரிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். சி-2062

திருமதி K நடராஜா என்பவருக்குச்சொந்தமான தேசிய அடையாளஅட்டை இல.367-002670V, மக்கள் வங்கி காசோலைபுத்தகம், இல 51120 வர்த்தகவங்கிபுத்தகம்இல.62-59 Draft முதலியஆவணங்கள் பேர்சுடன் 1-2-88 தவறிவிட்டது. இதைக்கண்டெடுத்தவர்கள் திருமதி K நடராஜா, சாமுவேல் சன்ஸ் லேன், செம்மணி றோட், முத்திரைச் சந்தி, நல்லூர், யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம்வழங்கப்படும் சி-2044

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்துகொண்டிருந்த 28ஸ்ரீ7785 இலக்கலொறி தாரகா மாங்குளத்துக்கு அருகில் ஒல்லிக்குளம்என்னுமிடத்தில் கடத்தப்பட்டலொறியில் அனுப்பப்பட்ட2சூட்கேஸுகள் காணமற் போய்விட்டன இந்த சூட்கேஸுக்குள்முக்கியமான தஸ்தாவேஜுகளுடன் பொருள்களும் இருந்தன. 2 சூட்கேஸுகளையும்தவறி எடுத்தவர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு ஒபபடைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். எஸ். யோகராசா, 186/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். சி-2049

## மணப்பந்தல்

யாழ் இந்து உயர்குலத்தைச் சேர்ந்த நடுத்தர உயரம், பொது நிறமுடைய செவ்வாய் குற்றமற்ற 30 வயது டாக்டர் பெண்ணுக்கு நன்கு படித்து உத்தியோகமான மணமகன் தேவை. தகுந்த சீதனம் கொடுக்கப்படும். முழு விபரங்களுடனும் ஜாதக குறிப்புடனும் விண்ணபபிக்கவும். விளம்பர இல. 2046, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [சி 2046]

யாழ்ப்பாணம் இந்து வேளாள பெற்றோர் தங்கள் அழகிய 35 வயதான பயிற்றப்பட்ட ஆசிரிய மகளுக்கு தகுந்த மணமகன் தேடுகிறார்கள். வீடு உட்பட தகுந்த சீதனம் கொடுக்கப்படும். சாதகக் குறிப்புடன் முழு விபரங்கள் அனுப்பவும். விளம்பர இல.சி 2037 மே/பா, ஈழநாடு யாழ்ப்பாணம். (சி 2037)


உஷா சினிமா

[ராஜா தியேட்டருக்கு முன்பாக]

விஜயகாந் — ரேகா செந்தாமரை நடித்த கலைஞரின்......

மக்கள் ஆணையிட்டால்


[ஒரிஜினல் பிரதி]

படப் பிரதிகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள் எ-2511



**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



**மு. நவஜீவன்**

மலர்வு: 2-5-1953
உதிர்வு: 6-2-1983.

அன்பின் திருவுருவே பண்பின் சிகரமாய், வாழ்வின் வழி காட்டியாய்,குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு திடீரென அணைந்துவிட்ட அன்புத் தெய்வமே! உங்கள் ஆதமா சாந்தியடைய இறைவனை என்றும் துதிக்கிறோம்.

என்றும் தங்கள் பிரிவால் துயரும்,

பெற்றோர்,
சகோதரர்கள்'
சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனி,
உற்றூர், உறவினர்.

''ஜீவகம்''
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி. (சி-2071]

## ஓராண்டு நினைவஞ்சலி



**சுப்பிரமணியம இரத்தினம்மா**

அன்னைமடியில்: 26-11-1932
இறைவன் அடியில் 16-2-1987
திதி: 6-2-1988

உன் உயிரை மதியாது எம் உயர்வில் மகிழ்வு கொண்டாய் உன் நினைவு எங்கள் நெஞ்சங்களில் அணையா ஒளித்தீபமாக ஒளி வீசும். ஆத்மா சாந்தியடைய எங்கள் குலத் தெய்வங்களாகிய டணிப்புலம் அம்பாள் சாந்தையூர் பிள்ளையாரை பிரார்திக்கும். கணவன் சுப்பிரமணியம் மகள்: சுகந்தினி, தாய், சகோதரங்கள் மருமக்கள், பேரப்பிள்ளைகள் உற்றூர், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வைபவத்தில் கலந்து கொள்ள தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

கணவர்:
வி. சுப்பிரமணியம்,
மகள்: சுகந்தினி.

சாந்தையூர்,
பண்டத்தரிப்பு.
[சி 2029)

### மெக்ஸிக்கோவில் சுற்றுடல் பாதிப்பு:

# தலைநகரில் நிலைமையைக் கையாள அவசரகாலச்சட்டம் பிரகடனம்!

மெக்ஸிக்கோசிட்டி, பெப் 5,

**மெக்ஸிக்கோவின் தலைநகரான மெக்ஸிக்கோ சிட்டியில் சுற்றுடல் பெருமளவில் பாதிப்படைந்துள்ளது. இப்பாதிப்பையடுத்து இந்த நகரத்தில் அவசரகாலச்சட்டம் போடப்பட்டுள்ளது. பொதுமக்களும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.**

மெக்ஸிக்கோவின் தலைநக யன புகைமூட்டம் முகில் ரின் மீது கருமையான இரசா போன்று வானத்தில் படர்மீது ள்ளது.

இதன் காரணமாக தாவரங்கள், மற்றும் இயற்கைவளங்கள் மீது ரசாயனப் படிவுகள் பதிந்திருக்கக் காணப்படுகின்றன

இ படிவங்களால் மெக்ஸிக்கோ நகரவாசிகள் சுகாதார ரீதியான பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் சுவாசிப்பதில் சிரமம், நெஞ்சுவலி, வாந்திஎடுத்தல்போன்ற தேகாரோக்கியக்குறைவான கஷ்டங்களுக்குள்ளாகியுள்ளனர்

இதையடுத்தே மக்கள் நலன் கருதி நேற்று முதல் மெக்ஸிக்கோ நகரில் அவசரகாலச்சட்டம் போடப்பட்டுள்ளது

7 ஆயிரம் அரசாங்கவாகனங்களை மெக்ஸிக்கோ நகரிலிருந்து குறைத்துக்கொள்ள மெக்ஸிக்கோ அரசு முடிவு செய்துள்ளது இததுடன் இந்நகரத்திலுள்ள கைத்தொழில் ஆலைகளையும் 50 சதவீதம் மூடிவிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மெக்ஸிக்கோநகர் மீது படிந்துள்ள இரசாயனகடும் புகைமண்டலததை கலையச் செய்வதில் மெக்ஸிக்கோராட்டின்சுற்றுடல்பாதுகாப்ப நிபுணர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனா

[கி]

### வலி-வடக்கில் நிவாரணம் கிடைக்கவில்லை

(பலாலி

வலி-வடக்குப்பகுதி மக்களுக்கு நான்கு வாரநிவாரண பொருட்களில் ஒரு வாரநிவாரண பொருட்கள் கூட இது வரை கிடைக்கவில்லையாம.

வலிவடக்கு பகுதி மக்களுக்கு நிவாரணப்படிவம வழங்கப்பட்டு ஒரு மாதகாலம் முடிவடைந்தும் இன்னும் ஒரு வாரத்திற்கான பொருள்கூட வழங்கப்படவில்லை

### பங்களாதேஷில் நடைபெறவிருக்கும் ஆசிய கிண்ண போட்டிகள் பிற்போடப்படலாம்

[டாக்கா]

பங்களாதேஷில் இம்மாத பிற்பகுதியில் நடைபெறவிருக்கும் நான்காவது 'ஆசியக் கிண்ண' கிரிக்கெட் சுற்றுப் போட்டி பிற்போடப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. பங்களாதேஷில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடியே இதற்கு காரணமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஆசியாவில் கிரிக்கெட் ஆட்டத்தில் கலந்துகொள்ளும் நான்கு நாடுகள் பங்குபற்றும் இவ் வெற்றிக்கிண்ணத்திற்கான போட்டி மூன்றுவருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும்.

இம்முறை இப் போட்டிகள் பங்களாதேஷில் நடைபெறவுள்ளன. பங்களாதேஷில் நிலவும் அரசியல் நெருக்கடியை எடுத்துபோட்டிகளைபிற்போடுமாறு எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன எதிர்க்கட்சிகளின் இக்கோரிக்கை நியாயமற்றதென ஆளும்கட்சியும்பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும் தெரிவித்துள்ளன. போட்டிகள் பிற்போடும் சூழ்நிலையே அதிகரித்துள்ளது.

1985ல் இலங்கையில் நடைபெற்ற 3வது ஆசியக்கிண்ண போட்டியில் இலங்கையணி பாகிஸ்தானை தோற்கடித்து கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது இலங்கையில் அப்போதிருந்த நெருக்கடிநிலை காரணமாக இந்திய அணி போட்டியில் கலந்துகொள்ளாததும் தெரிந்ததே

[சி]

### ஆந்திர ஆளுநர் மாளிகை இந்திரா காங்கிரஸ் அலுவலகமாகிறது

### ராமராவ் பிரதமர் ராஜீவிடம் புகார்

ஹைதராபாத் பெப் 5,

ஆந்திரப பிரதேசத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமே பதவியிலிருக்கிறது அது பொறுப்புடனும் இயங்கி வருகிறது தொடர்ந்து இந்த அரசாங்கம் [illegible] பொறுப்புடன் இயங்க அனுமதிக்கவும்.

இவ்வாறு [illegible] கடிதம் ஒன்றை ஆந்திர முதல்வர் திரு என்ரி ராமாவ் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கும் ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமனுக்கும் அனுப்பியுள்ளார்.

ஆந்திர மாநில ஆளுநர் மாளிகை இந்திரா காங்கிரஸ் கட்சி அலுவலகமாக மாறி வருகிறது என்றும் குற்றம் சாட்டியுள்ள திரு ராமாராவ். ஆளுநருக்குரிய பொறுப்புக்களை உரியமுறையில் மேற்கொள்ளுமாறு ஆந்திர ஆளுநர் திருமதி குமுத்பென் ஜோஷிக்கு [illegible] புத்திமதி வழங்குமாறு திரு ராமராவ் தமது கடிதத்தில் கேட்டுள்ளார்.

### வியாழபகவானின் ராசி வாரியான பொதுப்பலன்

**மேடம்**

இந்த ராசிக்காரர்களுக்கு வியாழ பகவான் ஜெனமத்திற்கு வருவதால் தேகசுகம் மத்திமம். உஷ்ண சம்பந்தமான ரோகங்களுக்கும் இடமுண்டு. எனவே சிறுவருத்தம் வரினும் பெருமுறையில் கவனிக்கப்படல் வேண்டும்.

ஜென்ம வியாழன் அலைக்களிப்பான். என்றாலும் அதற்குத் தகுந்த பயன் கிடைக்காமல் போகாது குடும்பப் பிரச்னைகளை ஒரு தீர்வுக்குக் கொண்டுவருவதற்கு கஜகாணம் போடவேண்டிவரும். சுப காரியங்களை பிறர் புகழும் அளவிற்கு செய்யும் உங்களுக்கு அற்ப சந்தோஷம் கிடைக்கும் மேலும் சிலருக்கு பூமி விடயங்களில் ஏமாற இடமுண்டு. எனவே எவ்விடயததிலும் சிந்தித்துச் செயற்படவும் வியாபாரிகளுக்கு மத்திமசுகமுண்டு. உத்தியோகத்தர்களுக்கு வேலையில் கவனம் வேண்டும். இல்லாவிடில் வேலை போகுமளவு ஆபத்து நேர வாய்ப்புண்டு.

பெண்களுக்கு!

அடிக்கடி தகராறுகளும் குழந்தைகளால் பெரிய வாககுவாதங்களும் வந்து சரியாகிவிடும். மாணவர்களுக்கு கல்வியில் விடாமுயற்சி வெற்றியளிக்கும்.

**இடபம்**

இந்த இராசிகாரர்களுக்கு வியாழ பகவான் இரண்டாமிடம் வருவதால் இக்காலம் நெருக்கடியான பலன்களுக்கு இடமுண்டாம். குறிப்பாக மறைமுக எதிர்ப்புகள், கிட்டமிடும் விடயங்களில் திடீர் தாக்கங்கள் அன்னியர் தலையீடு, ஆகியவற்றால் ஆபத்துக்களுக்கு இடமிருப்பதல் கவனம் வேண்டும் எம்முறையோரைக் கொண்டவர்களாலும் நம்பிநடக்கக் கூடாவாம். குடும்பத்திலும் பொறுமை வேண்டும்.

வியாபாரிகளுக்கு:

இடப்பிரிவும் நெருங்கிய தொடர்புடைய ஒருவருடன் பகைத்துக்கொள்ளவும் இடம் உண்டாம்.

உத்தியோகத்தர்களுக்கு:

இவர்களுக்கு மிகப்பெரிய பொறுப்பான பதவி உயர்வும் அத்துடன் சோதனையும் சேர்ந்துவருவதால் தவிக்க நேரிடும்.

பெண்களுக்கு:

நீண்ட நாட்கள் எதிர்பார்த்த விடயங்கள் நடைமுறைக்குவரும். விவாக பிணக்குகளும் உண்டாம். காதலர்களுக்கு மனமுறிவுக்கும் இடமுண்டாம்.

மாணவர்களுக்கு:

அட்டவதானம் இருப்பின் கல்வியில் சித்தி பெறலாம். தெய்வவழிபாடு நன்மைதரும்.

**மிதுனம்**

இந்த ராசிக்காரர்களுக்கு வியாழ பகவான் 11மிடம் வருவதால் இக்காலம் தேகசுகம் உண்டு. தேடியது கிடைக்கும். தொழில் நலன், தொல்லைகள் நிவர்த்தி, சத்துரு ஜெயம், பொன், பொருள் சிறப்பும் உண்டாம். மேலும் இக்காலம் குடும்பத்தில் திடீர் திருப்பங்களுக்கும் இடம் உண்டாம். புதுத் தொழில் விருப்பு புத்திரர் சுகமுண்டாம்.

**திருமலை**

**வே. இரவீந்திரன்**

வியாபாரிகளுக்கு: முன்னேற்றம் ஏணிப்படியாக இருக்கும். ஒருசிலர் கூட்டுத் தொழில் இருந்து பிரிந்து தனித் தொழில் ஆரம்பிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்

உத்தியோகஸ்தர்களுக்கு: எதிர்பார்த்த வரவுக்கும் இடமுண்டு தொழில்சம்பந்தமான மாற்றங்களில் அவசரம் கூடாது. இலாப சுகமும் உண்டாம்.

பெண்களுக்கு: எண்ணிய விடயங்களில் பெரும்பாலும் வெற்றியை காணலாம் சகோதர சுகமும் உண்டு காதலர்களுக்கும் மணமாகாதவர்களுக்கும் மணவாழ்க்கைக்கும் இடமுண்டாம்.

மாணவர்களுக்கு உயர்கல்வி நாட்டங்களும் உண்டாம்.

**கர்க்கடகம்**

இந்த ராசிக்காரர்களுக்கு வியாழபகவான் 10 மிடம் வருவதால் இக்காலம் இருப்பிடம் அல்லது தொழில்சம்பந்தமான மாற்றங்களுக்கும் இடமுண்டாம். மேலும் இக்காலம் கலகலப்பாகவும், மகிழ்

(5-ம் பக்கம் பார்க்க)

### ஆப்கான்-பாக். எல்லையில்

# கண்ணிவெடித்தாக்குதல்: 11 பஸ் பயணிகள் பலி!

காபுல், பெப் 5

ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையில் நேற்று இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவம் ஒன்றில் 11 பேர் கொல்லப்பட்டனர்.

பஸ்வண்டிஒன்றின் மீதே இக் கண்ணிவெடித் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது இதில் இருந்தவர்கள் அனைவரும் பொதுமக்களாவர்.

கண்ணிவெடித்தாக்குதலையடுத்து பஸ்ஸில் இருந்தவர்களில் 9 பேர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மாண்டனர். இருவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும்வழியில் உயிரிழந்தனர்.

இத்தாக்குதலுக்கான காரணம் தெரியவில்லை. இதற்கு எவரும் உரிமை கோரவும் இல்லை.

மொத்தம் இருபதுபேர் இந்த பஸ்வண்டியில் இருந்தனர். தாக்குதலையடுத்து பல்வேறு பாகங்களாக இந்த பஸ்வண்டி சிதறியது என்று தெரிவிக்கப்பட்டது.

### போதைவஸ்துக் கடத்தல்:

# பனாமா ஜனாதிபதி மீது அமெரிக்கா குற்றச்சாட்டு!

லண்டன், பெப். 5

மத்திய அமெரிக்க நாடான பனாமாவின் ஜனாதிபதி ஜெனரல் அன்டோனியன நொரிகாமீது போதைவஸ்துக் கடத்தல் தொடர்பாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது

பனாமாவிலிருந்து மியாமின் தீவுக்கு கொக்கெயின் என்ற போதைவஸ்த்தைக் கடத்தியது சம்பந்தமாக கொலம்பிய நாட்டு கம்பனி ஒன்றிடமிருந்து பல மில்லியன டாலர்களை லஞ்சமாக ஜெனரல் நொரிகா பெற்றிருந்தார் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது

இக்குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக அமெரிக்காவுக்கான பனாமாவில் முன்னாள் ராஜதந்திரி ஒருவரின் வாக்கு மூலத்தையும் அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டுத் தவிர உள்நாட்டில் அரசியல் கொலைகள், போதைவஷ்த்துப்பாவனை என்பன தொடர்பாகவும் அமெரிக்கா நொரிகாவைக் குற்றஞ் சுமத்தியுள்ளது

ஜெனரல் நொரிகா இக்குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளார். தமது அரசியல் செல்வாக்கைக் குறைக்கும் அமெரிக்காவின் ஒரு சதித்திட்டப் இது எனை அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

(கி)

LONDON EXAMS
(May/June 88, Exams.)
COMMENCING TODAY
I. C. M. A. - Stage I
A. A. T. Prelim

விரிவுரையாளர் குழு: V. கருணநிதி, S.P. சிவஞானம், S. சிவபாலன். மற்றும் பிரபல பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்

குறிப்பு: குறுகிய காலத்தில், கூடிய மணித்தியாலங்கள், எடுத்து பாடத்திட்டத்தை முடித்து, கடந்த கால வினாக்களுக்கு விடைகளும் அளிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:

RAPID RESULTS INSTITUTE
212, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
எ-2508

தமிழ்நாடு அரசியல்: ஒரு கண்ணோட்டம்

# தமிழகத்தில் மீண்டும் ஸ்திர ஆட்சி ஏற்படுமா?

புரட்சித்தலைவர் எம். ஜி ஆர் பத்தாண்டு காலம் முதலமைச்சராக இருந்து உருவாக்கிய அ. தி. மு. கவை எவரும் அசைக்கமுடியாது என்ற உறுதிப்பாடு இன்று தமிழகத்தில் இல்லை அ தி மு. க அரசு இன்று பிளவுண்டு கிடக்கிறது.

முதல்வரின் மறைவுக்குப் பின் ஏற்பட்ட இருபெண்மணிகளின் போட்டாபோட்டியால் தமிழக அரசியலில் கடும் புயல் வீசுகிறது.

வைக்கம் நடராஜா ஐயரின் மகள் ஜானகி தமிழகத்தின் முதல் பெண் முதலமைச்சர் என்ற பெயருடன் அவரது அரசு கலைக்கப்பட்டுவிட்டது.

அ தி மு.க சட்டசபையில் 131 அங்கத்தவர்களைக் கொண்டு ஆட்சியை அமைத்தது எம் ஜி ஆரின் மறைவின்பின்னர் இது இரண்டாக உடைந்து 97 பேரின் ஆதரவுடன் ஜானகி விடப்பட்டார் மிகுதி எம்.எல் ஏக்களுடன் செல்வி ஜெயலலிதா இன்று கட்சி கட்டிக் களத்தில் குதித்துள்ளார்

கடைசிவரை நடுநிலைவகிப்பதாக இருந்த காங்கிரஸ் இறுதி நேரத்தில் கைவிரித்ததால் வந்த வினை இன்றைய நிலை. இந்தநிலையிலை காங்கிரஸ் கூட டமூனியாண்டி குழு, சிவாஜி குழு என இரண்டுபட்டிருக்கிறது.

அ தி மு.க ஆதரவாளர்களும் காங்கிரஸ் ஆதரவாளர்களும் விரக்தியடைந்து யாரை ஆதரிப்பது என்று சர்ச்சையில் ஈடுபட்டிருக்கும் வேளையில் கடந்த 2ம் திகதியன்று கூடிய தி மு.க சங்கங்களுக்குள் பிளவேதும் இல்லையென தமிழக மக்களுக்குப் பச்சைக்கொடி காட்டியுள்ளது.

தி மு க தலைவர் கருணாநிதி தான் பொதுச் செயலாளர் அன்பழகன்தான் துணைத் தலைவர் நாஞ்சிலார்தான் என்று தேர்வு நடத்தியுள்ளது. இதுவும் ஒருவகையில அரசியல் சாணக்கியம் எனலாம்

இன்றைய இரண்டுபட்ட அ தி மு. க. கட்சி நிலையில் சூழ்நிலையை எப்படித் தமக்குச் சாதகமாக்கலாமென்பதில் காங்கிரஸ்காரர் குறியாக இருக்கிறார்கள் சட்ட சபை அமளி துமளியைக் கவனிக்கும்போது ஜானகி அணியை அவர்கள் இனி ஆதரிக்கமாட்டார்கள் என்பது தெளிவாகின்றது சிவாஜி கணேசன் திடீரென சாங்கரசிலிருந்து ராஜினாமா செய்ததும் காங்கிரசுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

1984ல் எம் ஜி ஆர் உடல் நலமின்றி அமெரிக்காசென்ற காலத்தில் அ தி மு க வில் பதவிப்போட்டிகள் முளைவிட ஆரம்பித்த ஒரு பக்கம் ஜெயலலிதா, திருநாவுக்கரசு அ தி மு க இளைஞர் அணியினர்

மறுபக்கம் வீரப்பன், காளிமுத்து அணியினர் என முளைவிட்டனர் எம் ஜி. ஆர். பூரண சுகம் கண்டதும் இவர்கள் கோஷ்டிச் சண்டை, பதவிப்பித்து பிசுபிசுத்துவிட்டது

இந்த நிலையைப்பயன்படுத்த காங்கிரஸ் அப்போது தலைமைப் பீடம் கூட்டணியின் பக்தியில் காங்கிரஸ் அ தி. மு கவில் கோஷ்டி மனப்பான்மையை ஏற்படுத்தியது. ஜெயலலிதா காங்கிரஸ் காரருடன் நெருங்கியதொடர்புடையவராக இருந்தார். இன்றும்அந்தநிலை மாறவில்லை.

இன்றோ மத்தியில் காங்கிரஸ் ஆட்சியின் தவறான போக்கை எதிர்க்கும் நிலையில் அ தி மு. க. அணியினர் இல்லை

**காங்கிரஸ் முயற்சி தோல்வி**

1967ல் காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை இழந்தது இழந்த பொறுப்பை மீண்டும் பெற காங்கிரஸ் 20 வருடங்களாக முயற்சி எடுத்துத் தோல்வி கண்டது 1967க்குப் பின்னர் காங்கிரஸ் தி மு. க வுடன் தேர்தல் உடன்பாடு செய்துகொண்டு சட்டசபையில ஸ்தானங்களைப் பெற்றது.

1972ல் விவசாயிகள் கிளர்ச்சியால் தி. மு. க. ஆட்டங்கண்டது 1976 பெப்ரவரியில் அவசர நிலையைப் பயன்படுத்தி தி மு க ஆட்சி மத்திய அரசால் கலைக்கப்பட்டது.

1977ல் அ. தி மு. கவுடன் காங்கிரஸ் உடன்பாடு கண்டது. சட்டமன்றத்தில் அதிக இடம் வேண்டுமென்று கேட்டு முடியாமல் போனதால் அதிக ஸ்தானங்களில் போட்டியிட முன்வந்தது அப்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியுடன் உடன்பாடு கண்டது. இத்தேர்தலில் காங்கிரசுக்கு 27 இடங்கள் கிடைத்தன பின்னர் 1980 இல் தி. மு. கவுடன் தேர்தல் உடன்பாடு செய்தது.

**அனுதாப அலை**

1984ல நாடாளுமன்ற சட்டமன்றத் தேர்தல்கள் உரிய காலத்திற்கு முன்னர் நடந்தது. இந்திரா காந்தியின் மறைவும் எம். ஜி ஆரின் உடனலமின்மையும் உருவாக

## – புத்தொளி –

கிய அரசியல் அனுதாப அலையினால் இரு கட்சிகளும் பெரு வெற்றி பெற்றன ஆனால் இன்று அ தி. மு க. வைப் பிளவுடுத்துவதில் காங்கிரஸ் ஈடுபட்டுள்ளது

**ஜானகி ஜெயலலிதா மோதல்...**

அ தி மு. க. ஒன்றாக இருக்குமானால் எம் ஜி ஆரின் அனுதாப அலை மீண்டும் அ. தி மு. க வை ஆட்சிபீடம் மேற்ற முடிந்திருக்கும் ஆனால் ஜானகி ஜெயலலிதா மோதலினால் தமிழக மக்கள் விழி பிதுங்கி நிற்கிறார்கள்.

ஜெயலலிதாவிடம் சினிமாக் கவர்ச்சி இருக்கிறது எம் பி பதவியும் இருக்கிறது மத்திய அரசில் செல்வாக்குள்ள எம். பி. யாகவும் இருக்கிறார். கொள்கை பரப்புச் செயலாளராக இருந்ததால் மேடைகளில் சரளமாகப் பேசக்கூடியவராகி விட்டுவிட்டார் ஆங்கிலத்திலும் புலமையுண்டு அ தி.மு க வில் முக்கிய புள்ளியாகத் திகழ்கிறார் அவர்

**ஜெயலலிதா அணி காங்கிரசுடன் கூட்டு**

இன்று ஜெயலலிதா அணி காங்கிரஸ் உடன்பாட்டுக்கே அதிக வாய்ப்புண்டு காங்கிரஸ் தனித்து நின்று ஆட்சியை அமைக்கமுடியாது

தமிழக மக்கள் இத்தேர்தலில் கடந்த பத்தாண்டு காலம் தமக்கு ஏற்பட்ட லாபநட்டக் கணக்கைப் பார்க்கப் போகிறார்கள் தமிழகத்தில் ஒரு ஸ்திரமான அரசையே அவர்கள் இன்று விரும்புகிறார்கள். அண்ணாவின் கொள்கை இன்று முழுமையாக பற்றிநிற்கும் கட்சி எது என்பது அவர்களின் இன்றையகேள்வியாக இருக்கிறது.

தி. மு. கவை எவரும் குறைத்து மதிப்பிடமுடியாது. அரசியலில் அனுபவம் ஆற்றல் மிக்க தலைவர் கருணாநிதியின் இவருடைய பேச்சைக் கேட்க இன்று ஏராளமான கூட்டம்கூடுகிறது; இவரது எழுத்தைப் படிக்க வாசகர்கள் முன்னணியிலிருக்கிறார்கள் ஏற்கனவே முதல்வராகப் பணியாற்றியவர் தமிழகத்தில் நிலையான ஒரேகட்சி ஆட்சி வேண்டுமென்றால் அ தி மு.கவினாலேயே முடியும் என்ற கருத்தே தமிழகத்தில் நிலவுகின்றது

பதவிச் சண்டையிலே கவனம்செலுத்தும் அ. தி மு.க கோஷ்டியினால் இனி இணைய முடியாது. காங்கிரசும் இரு கோஷ்டியாகத் தத்தளிக்கிறது தி மு.கவில் உறுதிப்பாடு காணப்படுகிறது தமிழக மக்கள் வாக்கு யாருக்கு? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## தென்னையிலிருந்து தவறி விழுந்தார்

[பலாலி]

இளநீர் பறிக்க தென்னை மரத்தில் ஏறிய இளைஞர் தவறி விழுந்து கைமுறிந்த நிலையில் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

பலாலியைச் சேர்ந்த அழகரத்தினம்-ஜெயரத்தினம் [வயது 19] என்ற இளைஞர் இடது கை முறிந்த நிலையில் தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டார். நிலைமை மோசமானதால் யாழ் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார்.

## விபத்தில் காயம்

[பலாலி]

வீதி விபத்தில் வயோதிப மாது காயமடைந்தார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த சின்னத்துரை இரத்தினம் (வயது 70) என்ற வயோதிப மாது பொருட்கள் வாங்குவதற்காக சுன்னாகம் சந்திக்கு வந்துகொண்டிருந்த சமயம் வீதியால் சைக்கிளில் வந்த இளைஞர் அவரை மோதிவிட்டு ஓடிமறைந்துவிட்டார்.

காயத்துடன் நிலத்தில் விழுந்து கிடந்த வயோதிப மாது கால் முறிந்த நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## புதுவருட நிர்வாகிகள் தெரிவு

[நெல்லியடி]

தென்மராட்சிப் பாடசாலை அதிபர் சங்க உத்தியோகத்தர் வருமாறு: தலைவர்: திரு. கே எஸ். குகதாசன். உபதலைவர்கள்: திருவாளர்கள் ஸ். சின்னத்தம்பி, கே. சிவபாதசுந்தரம், செயலாளர் திரு. இ. கணேசன், உபசெயலாளர் திரு. எஸ். சாயபசிவம், பொருளாளர்: திரு. எஸ். கணேசலிங்கம், பத்திராதிபர் திரு வீ. பேரம்பலம்.

## மக்களின்கருத்துக் கணிப்பில் இந்திய அமைதிப்படையினர்

(யாழ்ப்பாணம்)

இந்திய அமைதிப்படையினர் யாழ் குடாநாட்டில் சிறான சிவில் நிர்வாகத்தை மேற்கொள்ள என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று அறியும் பொருட்டு மக்களிடையே கருத்துக் கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்

இதனடிப்படையில் ஆங்கிலத்தில் கேள்விக்கொத்தடங்கிய படிவம் ஒன்று தயாரிக்கப்பட்டு மக்களிடையே விநியோகிக்கப்பட்டு வருகிறது

மேற்படி படிவத்தில தற்போது அமைதிப்படையினரின் நடவடிக்கைகள் குறித்தும் தேர்தலை நடத்துவது குறித்தும் மக்களின் தனிப்பட்ட கருத்தும் கேட்கப்பட்டுள்ளது.

## ஜெயலலிதா அணிக்கு ஆதரவு

(கொழும்பு)

அ தி மு க ஜெயலலிதா அணிக்கு இலங்கை அண்ணா தி.மு க வும் இலங்கை எம் ஜி ஆர் மன்றமும் ஆதரவு வழங்கவுள்ளதாக இவற்றின் பொதுச் செயலாளர் ஜனப் கே நெய்னார். தெரிவித்துள்ளார்.

## 10 வருட கடூழிய சிறை

[கொழும்பு]

போதைவஸ்து வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு 10 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. டபிள்யூ சேனநாயக்க இத்தண்டனை வழங்கினர்.

81 மே 21ம் தேதி கொம்பனித்தெருவைச் சேர்ந்த ஒருவர் 19 கிறும் போதைப் பொருள்வைத்திருந்ததாக இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

## உரத்தட்டுப்பாடு நீங்கியது

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள கமநலசேவை நிலையங்களிலிருந்து தற்போது தேவையான அளவு யூரியா உரம் கட்டுப்பாட்டு விலையில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது

அண்மையில் யூரியா உரப் பெறுவதில் யாழ் மாவட்ட விவசாயிகள் பெருமளவு கஷ்டங்களை அனுபவித்து வந்தனர்.

அண்மைக்காலமாக யூரியா உரத்தை கறுப்புச் சந்தையில் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

[வா]

## மீண்டும் மருத்துவமாது பயிற்சி

(பலாலி)

தெல்லிப்பழை வைத்தியசாலையில் மீண்டும் மருத்துவமாது பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது

முன்னர் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் நடத்தப்பட்டு வந்தமருத்துவமாது பயிற்சி பதற்றநிலையை அடுத்து கடந்த சில மாதங்களாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது நிலைமை சீரானதையடுத்து மீண்டும் இம் மாதம் 9ம்திகதி முதல் பயிற்சி நடைபெறவுள்ளது.

## பாடசாலை பிள்ளைகளுக்கு பால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் ஆரம்ப பாடசாலை பிள்ளைகளுக்கு இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினர் பால் வழங்கி வருகின்றனர்.

நகரில் 9 பால்விநியோக நிலையங்களில் பிள்ளைகளுக்கு காலையில் பால் வழங்கப்பட்டு வருகிறது என்று இந்திய செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதி திரு. காலிசர்தர் தெரிவித்தார்.

குருநகர் பகுதியிலுள்ள பிள்ளைகளுக்கு பிற்பகலில் பால் வழங்கப்படுகிறது என்றும் கூறினார்

நகரில் மற்றும் பகுதிகளிலும் பால் வழங்க ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

## "நெருக்கடியான நிலையில் அதிபர்கள், ஆசிரியர்கள்"

[நெல்லியடி]

"நாட்டில் கொந்தளிப்பான நிலைமை உருவாகி மாணவரின் கல்வி பாதிப்படையும்போது சமுதாயம் அதிபர்களையும் ஆசிரியர்களையும் எதிர்பார்ப்புடன் நோக்குகிறது. இன்றைய நெருக்கடியில் அதிபர்களும் ஆசிரியர்களும் தமது கடமைகளை உரிய முறையில் ஆற்ற முடியாத நிலையில் உள்ளனர்".

இவ்வாறு தென்மராட்சி பாடசாலை அதிபர்கள் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் சாவகச்சேரி தெய்வேந்திரா படமாளிகையில் நடந்த போது தலைமை தாங்கி உரையாற்றிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் திரு. க. சி. குகதாசன் கூறினார்.

தொடர்ந்துபேசிய திரு குகதாசன் மேலும்குறிப்பிட்டதாவது:

"எமது சங்கம் உயர்ந்த குறிக்கோள்களைமுன் வைத்து உருவாக்கப்பட்டுள்ளது. அதிபர்கள், ஆசிரியர்கள் சிற்றூழியர் ஆகியோரின் நலவுரிமைகளைப் பாதுகாக்கும் அதேவேளையில் கல்வித்துறையிலும் சாதனைகளை நிலைநாட்டத் திட்டமிட்டுள்ளது மாணவரின் கல்வி முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு செயல்பட இச் சங்கம் உறுதி பூண்டுள்ளது."

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இமையாணன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இம் மாதம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பாடசாலை மண்டபத்தில் நடைபெறுகிறது

கல்லூரி அதிபர் திரு எம். குட்டித்தம்பி தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் பாடசாலை அபிவிருத்தி குறித்தும் ஆராயப்படுமென இச் சங்கத்தின் தற்போதைய செயலாளர் திரு ஈ. கந்தசாமி தெரிவித்தார்.

## தளபாடங்கள் பற்றாக்குறை

[பலாலி]

மயிலிட்டி மேற்கு ஞானோதய வித்தியாசாலையில், தளபாட பற்றாக்குறை உள்ளது.

இப்பாடசாலையில் ஆசிரியர் படிப்பிப்பதற்குக் கூட போதியளவு கதிரைகள் இல்லையாம். மாணவர்கள் நிலத்திலே இருந்து தான் படிக்கிறார்கள்.

## பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியா

1. கிளீனேர்ஸ் 3. எலக்ரீஷியன் கெல்பர்ஸ்
2. ஸ்ரோக்கீப்பர் 4. லேபர்ஸ் (யூவான் கம்பனி)

குவைத்

1. ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் (உடனடிப் பிரயாணம்)

மு. கு

முற்பணம் அறவிடப்படமாட்டாது. செவ்வாய் தவிர்ந்த நாட்களில் காலை 8-30 முதல் பிற்பகல் 5-00 மணிவரை நிலையம் திறந்திருக்கும்.

உடனடித் தேவை:

ஆங்கில தட்டச்சாளர் (பெண்) சம்பள விபரம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம். [எமது காரியாலயக் கடமை) பாஸ்போர்ட், பொண்ட், குறித்த தவணையில் செய்துதரப்படும்.

தொடர்புகொள்க:-

**கோல்டன் ரவல்ஸ் அன் ரூர்ஸ்**

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

சி-2069



## பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி ★ குவைத்

மேற்படி குறிப்பிட்ட இடங்களுக்கு உடன் பிரயாண ஒழுங்குகள் எம்மால் ஒழுங்குசெய்து தரப்படும். முழுவிபரமும் அறிய எமது முகவர் நிலையத்துடன் தொடர்புகொள்ளவும்.

சிங்கப்பூர் நாட்டிற்கு பணிப்பெண்களாக செல்ல விரும்புபவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். இரண்டுவாரங்களுக்குள் பிரயாண ஒழுங்குகள் எம்மால் செய்துதரப்படும்.

விபரங்கட்கு:

Azrika
**Green Flag**
**Travel & Tours**
No. 132, POINT PEDRO ROAD,
3rd Mile Post,
Kalviankadu,
Jaffna.

சி-2059



## கிறிஸ்தவ இறையியல் பட்டதாரி வகுப்புக்கள்

[செரம்பூர் சர்வகலாசாலை]
B. Th. (Bachelor of Theology),
B. D. (Bachelor of Divinity)
வகுப்புக்களுக்கான விரிவுரைகளும்
மருதனமடம் ஐக்கிய இறையியல் கழக
டிப்ளோமாவுக்கான விரிவுரைகளும்
1989 ஆனி மாதம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரம வளாகத்தில் ஆரம்பமாகும்.

**பெப்ரவரி 1989இல் நடைபெறும் பிரவேசப் பரீட்சைக்குரிய ஆயத்த வகுப்புக்கள் 1988 சித்திரை 1-ம் திகதி ஆரம்பமாகும்.**

குறைந்த பட்சம் G. G. E. (O/L) சித்தியடைந்த கிறிஸ்தவர்கள் முழுநேர மாணவர்களாக பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

செரம்பூர் B. Th., B. D. பயிற்சி நெறியை பின்பற்ற குறைந்த பட்சம் G. C E. (A/L) 4 பாடங்களிலும் சித்தி பெற்றிருக்கவேண்டும்.

மேற்படி பயிற்சி நெறியில் அனுமதிக்கப்படுவோருக்கு உதவிப் பணம் (Scholarships) வழங்கப்படும்.

திருப்திகரமாக பயிற்சி வகுப்புகளை முடித்து வெளியேறுவோருக்கு தென் இந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தின் முழுநேர ஊழியர்களாக பங்குபெற வாய்ப்புண்டு.

முழு விபரங்களுக்கும் உங்கள் விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய
**கடைசித் திகதி: பெப்ரவரி 28, 1988.**

முகவரி:-

| | |
|---|---|
| Registrar, | பதிவாளர், |
| Institute for | பொதுநிலையாளர்- |
| Evangelists | நற்தூதுப்பணி |
| And lay Training | பயிற்சி நிலையம், |
| "Asia House" | ஆசிய இல்லம், |
| Maruthanamadam, | மருதனமடம், |
| Chunnakam. | சுன்னாகம். |

(சி-2057)


### வியாழபகவானின்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

ச்சிகரமாகவும் இருக்கும், குறிப்பாக தொழில் விடயங்களில் அதிருப்தி காணப்படு . குடும்பத்திலும் மங்களகரமான விடயங்களுக்கும் இடமுண்டாம்.

வியாபாரிகளுக்கு: இக்காலம் வியாபாரம் மந்தநிலைகாணும். சிலருக்கு நண்பர்களின் உதவியால் மீண்டும் சமநிலைக்கு வரும்.

உத்தியோகஸ்தர்களுக்கு: மேலதிகாரிகளின் கண்டிப்புக்கும் ஆளாகநேரும். சிந்தித்துச் செயல்படின் நன்மையுண்டாம்.

பெண்களுக்கு: இக்காலம் மாங்கல்ய பலன்களுக்கும் இடமுண்டாம் கன்னிப் பெண்கள் வாழ்விலும் திடீர்திருப்பமுண்டாம்.

மாணவர்களுக்கு; திடீரென வரும்மாற்றங்களால் திகைக்க நேரிடும். எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

[மிகுதி நாளை]


## யாழ். பல்கலைக்கழகம்— இலங்கை

## மாணவர் வதிவிடம்

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருப்பதற்கு வீடுகள்/அறைகள் தேவைப்படுகின்றன.

யாழ்ப்பாணம், கொக்குவில், திருநெல்வேலி, நல்லூர் ஆகிய பகுதிகளில் வீடுகள் உடையவர்கள் வீட்டினை / வீட்டின் ஒரு பகுதியினை / அறையினை, வாடகைக்கு / குத்தகைக்குக் கொடுக்கவிரும்பினுல் பல்கலைக் கழக மாணவர் நலச்சேவைகள் கிளை சிரேஷ்ட உதவிப்பதிவாளரைச் சந்திக்கவும். அத்துடன் அவரிடம் இதற்கென வுள்ள படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பங்களை அவரிடம் கொடுக்கவும்.

**பதிவாளர்.**

(எ 2504)



## 90- வது நாள் நினைவஞ்சலி



S.R துரையையா
(இளைப்பாறிய ஆசிரியர்)

பிறப்பு: 22-1-1916
இறப்பு: 8- 11-1987

அருகிருந்தோரும் அண்மிக்க முடியாத அமைதியற்ற செயற்கைச் சூழலில் இயற்கை எய்திய எந்தையார் பிரிவின் 90ம் நாளில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக கொக்குவில் ஆலயத்தில் பிரார்த்தனை நடைபெறும்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்.

சேச்லேன்,
கொக்குவில், [சி-2058)



உ
ஓம் சாயிராம்
விராட் விஸ்வ
பிரமனே நமஹ

## 7-வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் எஸ். கே.
சேனுதிராசாப்பத்தர்

தோற்றம்: 04-06-1927
மறைவு: 06 02-1981

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் பிரகாசித்தளங்கள் அப்பாவே நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஏழாண்டுசென்றாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு எந்நாளும் பிரியாது. இன்றைய ஏழாம் ஆண்டு நினைவு தினத்தில் என்றும் நிறைந்திருப்பீர்கள் என்று பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், மைத்துனி, மகன்மார், பேரன், பேத்திமார்.

"ஸ்ரீவாசம்",
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(எ 2045)



## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலி



வேலணை கிழக்கு
அமரர் சின்னத்தம்பி
கந்தையா
(நகை வியாபாரி)

"வீடுவரை உறவு;
வீதிவரை மனைவி;
காடுவரை பிள்ளை;
கடைசிவரை யாரோ!"
—கவிஞர் கண்ணதாசன்

இறைபதம் எய்திய எங்கள் குடும்பப் பெரியவரின் மறைவை எண்ணிக் கண்ணீர் வடிப்பதோடு அவரின் ஆத்மசாந்திவேண்டி இறைஞ்சும் மூத்த மருமகன் செ சிவஞானசம்பந்தன் (இளைப்பாறிய அதிபர், சரவணையூர் சோதிடர்) மூத்தமகள் அன்னலட்சுமி, பேரர் காலஞ்சென்ற சிவானந்தன் (முன்னுள் சிங்கப்பூர் கை கொப் சிப்பிங் லையின்), குகானந்தன் மேற்கு ஜெர்மனி) பத்மரஞ்சன் (சரவணை நாகேஸ்வரி மகா வித்தி வித்தியாலயம்), பேர்த்திகள் மற்றும் சரவணையூர் அன்பு நெஞ்சங்கள்.

"சிவா மகால்",
சரவணை மேற்கு,
வேலணை. (சி 1977)



## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

[சாந்தி தியேட்டர் அருகில்]

1988 — 1989 Com.

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. லோகசிங்கம் |
| கணக்கியல் | — | யோகராசா |
| வர்த்தகம் | — | தேவா |
| அளவையியல் | — | சந்திரராஜா |
| தமிழ் | — | செல்வி மீரா |
| புவியியல் | — | சண் |
| இந்து நாகரிகம் | — | பிரபல ஆசிரியை |

ஆரம்பம்: 07-02-88

[சி-2054]



## பெண் செயலாளர் தேவை

அகில உலக கெயர் (CARE International) யாழ். கிளைக்கு பெண் செயலாளர் தேவை. க. பொ. த ப. உயர்தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தராதரத்துடன், தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்), சுருக்கெழுத்து (தமிழ் ஆங்கிலம்) பரீட்சைகள் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும். இரண்டு மாதங்களுக்கு நாளாந்த கொடுப்பனவு வழங்கப்படும். சேவை நீடிப்பு பின்பு கவனத்திற்கு எடுக்கப்படும்.

தராதரப்பத்திரங்களுடன்
10-2-88 புதன்ன் காலை 9 30 மணிக்கு
41 (23) கண்டி வீதி யாழ்ப்பணம்
என்னும் முகவரியில் சமூகமளிக்கவும்

(சி-2067)



## விக்ரு டியுசன் சென்றர்

52, ஸ்ரான்லிரோட், யாழ்

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கும் O/L வகுப்புக்களுக்கும் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

A/L கலை, வர்த்தக

**88 மீட்டல்**

**Day Classes** (7-15 a. m.)

**ஆரம்பமாகிவிட்டன**

மு. குறிப்பு

1. Day Classes எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களால் ஒருங்கிணைந்து போதிக்கப்படுகின்றன.
2. வாரத்தில் ஐந்து நாட்களும் சகல பாடங்களும் நடைபெறும.
3. விடுதி வசதி செய்துகொடுக்கப்படும்.

எ-2510

**மணிவாக்கு**

உலகில் தலைசிறந்த தத்துவஞானி காலம்தான்

—பைரன்

# நமது நோக்கு

## ராஜீவின் திரிபுரா வெற்றி!

இந்தியப் பிரதமரின் செல்வாக்கு எப்படியிருக்கிறது?

அனுபவம் இல்லாமல் அரசியலுக்கு வந்து அவதிப்படுகிறார் என்பதாக இந்திய எதிர்க்கட்சிகளும், சில பல செல்வாக்குள்ள உள்ளூர், வெளியூர் பத்திரிகைகளும் அலட்டிக்கொண்ட போதிலும் மக்கள் மத்தியில் அவருக்குச் செல்வாக்கு குறைந்துவிடவில்லை. அது வளர்ந்துதான் இருக்கிறது என்பதை திரிபுரா மாநிலத்தேர்தல் நிரூபித்துள்ளது. அன்னை இந்திரா காலத்திலிருந்தே சுமார் பத்து ஆண்டுகள் பதவியிலிருந்த மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சியைத் தோற்கடித்து இந்திராகாங்கிரஸ் கூட்டணி அங்கு பதவிக்கு வந்துள்ளது. 59 தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் ஐ கூட்டணி 31 இடங்களை வென்றுள்ளது ஏற்கனவே பதவிலிருந்த மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சி 28 இடங்களை மட்டுமே பெற்று தோல்வியடைந்துள்ளது.

அதேநேரம் மேகாலயா மாநிலத்தேர்தலில்இந்திரா காங்கிரஸ் அதிக இடங்களை வென்றுள்ள போதிலும் தனியாக அரசு அமைக்கும் பெரும்பான்மை பெறவில்லை. எனினும் உதிரிக் கட்சிகளதும், சுயேச்சையாளர்களதும் ஆதரவுடன் ஆட்சியில் அமரும் வாய்ப்பு அங்கு குறைந்துவிடவில்லை.

இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும், பாதுகாப்புக்கும் எல்லை மாநிலங்கள் தமது கட்சியின் கையில் இருப்பது அவசியமென்று கருதும் மத்திய தலைவர்களுக்கு இது மகிழ்ச்சியளிக்கும் என்று கூறத்தேவையில்லை.

இந்திய மத்திய அரசு பலவீனப்படுவதை வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் வெளிச்சக்திகளுக்கு நிச்சயம் இது திருப்திதரமாட்டாது.

பக்கத்து நாடு ஒன்று அணுகுண்டைத் தயாரித்து வருவதாக இந்தியா என்னதான் கரடியாகக்கத்திய போதிலும் அது பற்றிக் கொஞ்சமும் அக்கறை காட்டிக்கொள்ளாத அமெரிக்க றீகன் அரசு பாகிஸ்தான் அரசுக்கு பல கோடி டாலர் மதிப்புக்கான உதவிகளை வழங்க முடிவுசெய்ததையடுத்து இந்தியாஅணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றை சோவியத்திடமிருந்து குத்தகைக்கெடுத்துள்ளது. இந்தக்கப்பலில் அணுஆயுதம் எதுவும் பொருத்தப்படவில்லையாம். ஆனால் அப்படியான ஆயுதங்களைப் பொருத்திக் கொள்ளவேண்டிய வசதிகள் இருக்குமென்றுசொல்லத் தேவையில்லை.

ஆக. பாகிஸ்தான் அமெரிக்காவின் மறைமுகஉதவியுடன் அணுகுண்டு உற்பத்தி செய்யுமானால் இந்தியாவும் அணுகுண்டுகளை உற்பத்திசெய்துதான் ஆகவேண்டுமென்பதில்லை. அப்படியான சவாலை எதிர்நோக்க அது தயாராய் இருக்கின்றது என்பதை இந்த அணுசக்தி ''சப்மெரீன்'' வருகை எடுத்துக்காட்டிவிட்டது.

ஆஸிய கடல் பிரதேசத்தில் சீனுவுக்குப்பின் இந்தியாவிடமே இப்படியான கப்பல் ஒன்று இப்போது இருப்பதாகக் கூறப்படுகின்றது இப்பிரதேசத்தை அண்மித்த பகுதிகளில் அமெரிக்க அணுக்திக்கப்பல்கள் நடமாடுவதாலும் இந்துசமுத்திரப் பிரதேசத்தின் பாதுகாப்பில் இந்தியா மிகுந்த அக்கறை கொண்டிருப்பதாலும் இந்தியக்கடற்படைக்கு அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல் அவசியமாயிருக்கலாம்.

1971ம் ஆண்டு நடந்த இந்தியபாகிஸ்தான்போரின் போது வங்கக் கடல் பிரதேசத்தில் பாகிஸ்தான் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றை இந்திய கடற்படையினர் நிர்மூலமாக்கியது நினைவிருக்கலாம். இப்பொழுது சுமார் எட்டு நீர்மூழ்கிகள் இந்தியாவிடம் இருப்பதாகத் தெரிகின்றது. நீர்மூழ்கிகளைக் கட்டிக்கொள்ளும் திறமையும் இந்தியாவிடம் உண்டு. எனவே புதிதாக அணுசக்தி நீர்மூழ்கிகளை உருவாக்கிக்கொள்வதற்கு இப்போது குத்தகைக்கு பெற்றுள்ள அணுசக்தி கப்பலின் மாதிரியைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

நடந்துமுடிந்த் குறித்த மாநில தேர்தல்களில் இந்தியாவின் கட்டுக்கோப்பு உறுதியாக இருக்கவேண்டியதின் அவசியத்தை மக்கள் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள் என்று கொள்வதாயின் அண்டைநாட்டு விவகாரங்களில் இந்திய அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கும் அவர்கள் அங்கீகாரம் அளித்துள்ளார்கள் என்று விமர்சிக்க முடியும்.

திரிபுராவிலும் அடுத்துள்ள மாநிலங்களிலும் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ள வன்செயல்களுக்கெதிராக 'ராஜீவ்' அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளும் இத்தேர்தல்களில் பிரதிபலித்திருக்கமுடியும் என்றாலும் சோவியத் அணுசக்தி நீர்மூழ்கியின் வருகையோடு கூடிய திரிபுரா வெற்றி 'ராஜீவ்' காந்தியின் உள்நாட்டு வெளிநாட்டு செல்வாக்கினை பெருமளவில் உயர்த்தியுள்ளது எனலாம்.

எதுவானாலும் இந்திரா காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் ஆட்சிநிலவும் மாநிலங்களில் இத்தகைய நிலைமை சிலபல தாக்கங்களை உருவாக்கும் என்று எதிர்பார்க்கலாம். அவை இப்போதையநிலைமையைத் தலைகீழாகவும் மாற்றிவிடலாம். பொறுத்துப் பார்ப்போம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1988-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81. Eelanadu P.O Box No:49. Telegram, Eelanadu, Telephone: 22389, 24126.

### அதிரடிப்படை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை கடந்த சனிக்கிழமை அதிரடிப் படையினருக்கும் ஜே வி பி தீவிரவாதிகளுக்குமிடையில் இடம் பெற்ற மோதலில் தீவிரவாதிகளுடன் சம்பந்தமான இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தென்பகுதியில் இவ்வாறான சம்பவங்கள் கடந்த சிலவாரங்களில் பல இடம்பெற்றுள்ளது.

(சி)

### கொழும்பு-யாழ்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சேவையை யாழ்ப்பாணம் வரை நீடிப்பதற்கு ஏற்றவகையில் புகையிரதப் பாதை தற்போது சீரமைக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சார்த்தமாக சரக்குவண்டியொன்று யாழ்ப்பாணத்துக்கு அடுத்தவாரமுற்பகுதியில் வரவுள்ளது என்றும் புகையிரத திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

### 87 டிசம்பர்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மானிக்கும் என்று தெரிவித்த ஜனாப் மன்சூர்; இப்பரீட்சையை நடததுமாறு வலியுறுத்தி கல்வியமைச்சுக்குதாம் கடிதம எழுதியுள்ளதாகவும் பொது நிறுவனங்களும் கல்வியமைச்சிடம் கோரிவருவதாகவும் கூறினர்.

இப்பரீட்சை நடத்தப்படாவிட்டால், வடபகுதியிலுள்ள இருபத்தையாயிரத்திற்கு மதிகமான தமிழ் மாணவர்களின் கல்விநிலை பாதிக்கப்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

(ஒ)

### 31-ம் நாள் நினைவஞ்சலி



**செல்வி ஜெயக்கிருஷ்ண சிந்துஜா**

அன்னையின் மடியில்; 6-1-85

ஆண்டவன் அடியில்; 5-1-88

பிஞ்சுப் பருவத்திலே கொஞ்சி விளையாடும் வேளையிலே சிந்து என்றெல்லாம் எம் நாவினால் அழைத்தோமே; இனிமேல் எப்படி அழைப்போம், இனி எப் பிறப்பில் காண்போம். சிந்து உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்;

அப்பா, அம்மா, அக்கா அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், அன்ரிமார், உறவினர்கள்.

34/1 கல்லூரி வீதி,
நீராவியடி.

(சி-2022)

## அந்தரீதபிரதிஷ்டா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்) இணுவில் ஜெகராசசேகர விநாயகராலய அந்தரீதபிரதிஷ்டா மஹாகும்பிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமைபகல் நடைபெற இருக்கிறது. கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள், சிவஸ்ரீ பொ. பாஸ்கர குருக்களும் இன்னும் பல சிவாசாரியர்களும் சேர்ந்து நடத்தி வைப்பார்கள்.

## பிரயாண ஒழுங்குகள்

★ டுபாய்

யுக்கி தையல்மெஷினில் வேலைதெரிந்த 2ப—40க்கும் உட்பட்ட பெண்கள், ஆண்கள் உடனடியாகச் செல்வதற்கு ஒழுங்குகள் செய்துதரப்படும்.

(1) உணவு இருப்பிடவசதி இலவசம்.
(2) 2 வருடம ஒப்பந்தம்.
(3) முற்பணம் அறவிடப்படமாட்டாது.

பாஸ்போட்-6 படம் நேரில் சமூகந்தரவும்.

சொரூபினி றேடேஸ், கண்டி வீதி, கைதடி.

185/2 நியூலலிதா பில்டிங், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஏ-2513

## விலங்கியல் 88

முளையவியல் இன்று ஆரம்பம்

சனி, ஞாயிறு 7-00 — 8-00

**திரு. ஞானம்**

## நிரு டியூசன் சென்ரர்

[எ-2516] கோண்டாவில்.

## பிரயாண ஒழுங்குகள்

கப்பலில் செல்வதற்கு

Chief Officer
Second ( fficer
Radio Officer
Third Officer
Third Engineer
மற்றும்
Oiler, AB ஆகியோருக்கு

பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தொடர்பு கொள்ளவும்:

தி. பாக்கியநாதன்,
185/2, நியூ லலிதா பில்டிங்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

எ-2512

## மரண அறிவித்தல்

### திரு. தம்பு செல்வத்துரை

மீசாலை வடக்கைச் சேர்ந்த இளைப்பாறிய தபால் அதிபர் திரு. தம்பு செல்வத்துரை 02-02-88ல் இயற்கை எய்திவிட்டார். அன்னார் காலஞ்சென்ற திரு. செல்லையா, சின்னத்தங்கம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரி நேசம்மாவின் அன்புக் கணவரும், நாகேந்திரனின் (தேசிய இளைஞர் சேவை மன்றம், யாழ்ப்பாணம்) அன்புத் தந்தையும், சரோஜினிதேவியின் (மக்கள் வங்கி, சாவகச்சேரி) அன்பு மாமனாரும், தனுஷியா, நிலோஷனு, கிருஷிகா ஆகியோரின் அனபுப் பேரனும், முத்தையா இ.போ.ச. (கோண்டாவில்) அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 02-02-88 மாலை 5-00 மணிக்கு வேம்பிராய் மயானத்தில் நடைபெற்றன. உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

(சி-2076) தகவல்:- செ. நாகேந்திரன்

### திருமதி தர்மநாயகி செல்வராஜா

சித்தன்கேணி Dr. அண்ணாமலை செல்வராஜா (அரச வைத்தியசாலை, கொத்தான்தீவு, புத்தளம்) அவர்களின் அன்பு மனைவியும், நந்தினி காங்கேயன் (U. K ), சாந்தினி செல்வராஜா (யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும்; தெய்வேந்திரம் காங்கேயன் (U. K.) அவர்களின் அன்பு மாமியாரும்; அமரர் செல்வத்துரை, அமராவதி செல்வத்துரை ஆகியோரின் அன்பு மகளும்; அமரர் அண்ணாமலை, சின்னத்தங்கச்சி அண்ணாமலை ஆகியோரின் அன்பு மருமகளும்; செல்வத்துரை மாரிமுத்து, அமரர் தெய்வேந்திரம்பிள்ளை, இராஜநாயகம், சண்முகநாதன், அமரர் கனகரத்தினம், அமரர் சிவப்பிரகாசம், அமரர் தர்மராஜா, திருமதி M. K. சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்; மார்க்கண்டர், திருமதி கமலாம்பிகை சுந்தரராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியுமான தர்மநாயகி செல்வராஜா அவர்கள் 4-2-88 வியாழக்கிழமையன்று சிவபதம் அடைந்தார். ஈமக்கிரியைகள் 7-2-88 ஞாயிறு காலை நடைபெறும்.

தகவல்:- Dr. அ. செல்வராஜா,
'செல்வ நிலையம்', சித்தன்கேணி.

(சி-2078)